**செ. கு. எண்**:458 **நாள்**:24.12.12

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 24.12.2012

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி உட்கோட்டம், பரளச்சி காவல் நிலையத்தில் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. சிவக்குமார் அவர்கள் 20.12.2012 அன்று அருப்புக்கோட்டை – சாயல்குடி சாலையில் இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. நாகராஜன் அவர்கள் 21.12.2012 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை தலைமைக் காவலர் திரு. நாகராஜன் மற்றும் காவலர் திரு. சிவக்குமார் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாரடைப்பால் காலமான தலைமைக் காவலர் திரு. நாகராஜன் மற்றும் சாலை விபத்தில் காலமான காவலர் திரு. சிவக்குமார் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**